தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 15-3-2019

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் சந்தைப்படுத்துதலில் புதிய பரிமாணங்கள்

மத்திய மற்றும் மாநில அரசுகள், விவசாயிகளுடைய வருமானத்தை அதிகரிக்கவும், பொருளாதார சிரமங்களை எதிர்கொள்ளவும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. இந்த நடவடிக்கைகளில் சீர்திருத்தங்களுடன் கூடிய வேளாண் சந்தைப்படுத்துதல் ஒரு முக்கிய உத்தியாக கருதப்படுகிறது. வேளாண் சந்தைப்படுத்துதலில் புதிய முயற்சிகளாக மின்-தேசிய வேளாண் சந்தை, வேளாண் பொருட்கள் மற்றும் கால்நடை சந்தைச்சட்டம் 2017, மாதிரி ஒப்பந்த பண்ணை சட்டம் 2018 மற்றும் விவசாய உற்பத்தியாளர்களின் கூட்டு சந்தைப்படுத்துதல் போன்றவை அறிமுகப்படுத்தப்பட்டன.

இச்சூழலில், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம் மற்றும் ஜெய்பூரிலுள்ள தேசிய வேளாண் விற்பனை நிறுவனம் ஆகியவை இணைந்து 11.03.2019 முதல் 13.03.2019 வரை வேளாண் சந்தைப்படுத்துதல் மற்றும் வேளாண் வணிகத் துறைகளைச் சார்ந்த 30 அதிகாரிகளுக்கு ‘‘வேளாண் சந்தைப்படுத்துதலில் புதிய பரிமாணங்கள்’’ என்ற தலைப்பில் பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்த பயிற்சியில், பல்வேறு புது முயற்சிகளாக ஒப்பந்த பண்ணையம், மின் வேளாண் சந்தை, சேமிப்பு கிடங்கு போன்ற பல்வேறு தலைப்புகளில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. மேலும் வேளாண் விளைப்பொருட்கள் சந்தைச் சட்டம் 2003, வேளாண் விளைப்பொருட்கள் மற்றும் கால்நடை சந்தைப்படுத்துதல் சட்டம் 2017 போன்ற மத்திய, மாநில அரசுகளின் சட்டங்கள் குறித்து விளக்கப்பட்டது.

இந்த பயிற்சியை 11.03.2019 அன்று தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் அ.சு. கிருட்டிணமூர்த்தி அவர்கள் துவக்கி வைத்து மூன்று நாட்கள் சிறப்பாக நடைபெற்றது.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் நீ. குமார் அவர்களின் முடிவுரையுடன் 13.03.2019 அன்று நிறைவு செய்யப்பட்டது. அன்று நடைபெற்ற பயிற்சி நிறைவு விழாவில் துணைவேந்தர் அவர்கள் வேளாண் விற்பனையில் உள்ள பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டு, விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க பயிற்சி பெற்ற வேளாண் விற்பனைத்துறை அதிகாரிகள் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

மக்கள் தொடர்பு அலுவலர்